உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 19 | கீலக ௵ ஆனித் திங்கள் 1-ம் உ [14-6-68] | இதழ்-6

திருநெறியதமிழ்

வித்துவான். தா. குருசாமி ஓதுவார் அவர்கள்,
3. சொக்கப்பநாயக்கர்தெரு,
மதுரை – 1.

தமிழ் என்ற சொல்லை அடையாகவுடைய பல சொற்களிலே திருநெறியதமிழ் என்பதும் ஒன்று. செந்தமிழ், ஒண்டமிழ், தீந்தமிழ் என்பன போன்று பண்பினடியிலே தோன்றிய சொல்லேயாகும். திருநெறியதமிழ் என்ற தொடர் திருமுறையில்தவிர வேறு இடத்திற் காண இயலாது. தமிழின் பொதுவியல்பு முழுதும் திருநெறியதமிழுக்கு உண்டெனினும் சிறப்பியல்பு பெரிதும் பொதுளி இருப்பது இச்சொல்லிலேயாகும்.

சம்பந்தர்வாக்கு:

செந்தமிழியற்கை சிவணிய இவ்விருநிலத்தில் மன்பதை அனைத்தும் நன்னெறி ஒழுக வழிவகை காட்டுவது திருநெறிய

தமிழேயாகும். திரு என்ற சொல் நெறியைச் சிறப்பித்தது. நெறியாவது சிவநெறி. சிவநெறி காட்டும் நெறி ஒன்றே திருநெறி. ஏனையவை நெறி என்ற அளவோடு நிறுத்துஞ் சொற்களாகும். நெறிகள் பலவற்றை விளக்கும் சொற்களே செந்தமிழ்; தீந்தமிழ்; ஒண்டமிழ்; மென்றமிழ்; இன்றமிழ்; நற்றமிழ்; முத்தமிழ் என்பவை. ஒருநெறியை ஒட்பமாக உணர்த்துவதே திருநெறி ஆகும்; **அத்திருநெறியுடைய தமிழ் திருநெறியதமிழ் என வழங்குவதாயிற்று.** நாம் இச்சொற்குப் பல்லாற்றானும் இடர்ப்பட்டுப் பொருளுரைப்பதைவிட **சம்பந்தர் வாக்கே நேர் பொருளுணர்த்தும்.**

திருநெறிய தமிழை உணர்தற்கு ஒருநெறியில் மனம் வைத்து உணர்வினில் வல்லாராய் விளங்குதல் வேண்டும். உணர்வு என்பது ஒருநெறியில் மனம்வைத்து ஓர்தலேயாகும். இதனைத் தொல்காப்பியனார் "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" என்ற நூற்பா நுனித்துணர்த்தும். ஒருநெறி; சைவசித்தாந்தச் செந்நெறியாகும்.

நெறிகள் சில:

நெறிகள் பலவற்றுள் இந்துமதத்தை எதிர்த்துவந்த பௌத்தமதம் சங்ககாலத்தில் தென்னாட்டில் பரவியிருந்தது. பௌத்தமதத்தை முறியடித்துக் கொண்டே ஜைனமதம் தென்னாட்டில் பரவியது. கி. பி. 4 ஆவது நூற்றாண்டுமுதல் ஏழாவது நூற்றாண்டுவரை ஜைனமதச் செல்வாக்கு தமிழ் நாட்டில் மட்டுமின்றி இந்தியா முழுவதுமே பரவியிருந்தது என்பதில் ஐயமில்லை. **கடவுள் இல்லையென்றே முடிவு கட்டியது பௌத்தசமயம். கடவுட்பொருள்என ஒருபொருளைப் 'பரமேட்டி' என்றுகுறிப்பிட்ட ஜைனசமயம் கடவுளுக்கும் உலக உயிர்க்கும் எவ்வித சம்பந்தமும்இல்லை என்று கடவுளை ஒதுக்கி விட்டது.**

ஐம்புலன் நுகர்ச்சியும் முடிவில் துன்பத்தைத் தருவன எனக்கூறி ஐம்புலன்களையும் தூர்க்கும் கொடிய துறவறத்தை வற்புறுத்தியதன் மூலம் உலக **போகத்தையும்** இழந்தனர் ஜைனர்கள். **இறைவனுக்கும் உயிர்கட்கும் சம்பந்தமில்லையென்று கூறியதால் பேரின்பத்தையும் பெறத்தவறினர்** ஜை

னர்கள். **இவ்வாறு இகபோகம் பரபோகம் இரண்டையுமே இழந்தனர்** என்ற கருத்து,

''சாக்கியப் பட்டும் சமணுருவாகி உடையொழிந்தும்
பாக்கிய மின்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்''

என்ற திருஞான சம்பந்தர் தேவாரத்தால் அறிவுறுத்தப்படு கின்றது. எனவே பௌத்த **ஜைனசமயங்கள் தெய்வங் கொள்கை யில்லாததாகவும் வேத விரோதமாகவும் இருந்த காரணம் பற்றி அவைமெல்ல மறையவேண்டும் என்பது திரு வருட்குறிப்பாயிற்று.**

கி. பி. 7 ஆவது நூற்றுண்டின் நடுப்பகுதியில் திருஞான சம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசு நாயனுரும் தோன்றி ஞர்கள். ஜைன பௌத்தர்களோடு அவர்கள் வாதம் புரிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இறைவன் திருவருள்தான் உலகத்தை நடத்துகின்றது என்பதை அவர்கள் அருட்செயல் கள் பலவற்றையும் செய்து உலக மக்கட்கு நிரூபித்துக் காட் டிஞர்கள். அவர்கள் செய்தவற்றைப் போன்ற அருட் செயல்கள் உலக மேடையில் எங்கும் யாராலும் இன்றுவரை செய்யப்படவில்லை என்று கூறுவது தற்பெருமையோ மிகையோ ஆகாது. நீற்றறை தாமரைப் பொய்கையாகக் குளிர்ந்தது. கருங்கற்பாறை கடலில் மிதந்தது; நஞ்சு அமு தாயிற்று; முதலையுண்ட பாலன் பல ஆண்டுகள் கடந்து உயிர்த்து எழுந்தான்; என்பு பெண்ணுயிற்று. இவைபோன்ற எண்ணிறந்த அருட்செயல்கள் நாயன்மார்களால் நிகழ்ந்தன என்பது தமிழகம் அறியாததல்ல. ஏழாம் நூற்றுண்டின் மத் தியில் இருந்து இவ்வாறு சைவசமயம் தலையெடுத்தது.

தமிழர்நெறி:

சைவசமயம் தமிழர் வாழ்வியலினின்றும் முகிழ்த்தது. தமிழர்நெறி என்ற பெருமையோடு விளங்கும் இந்நெறி பல நெறிகளையும் உள்ளடக்கும் வன்மையும் வளமையும் உடை யது. இதனை அப்பரடிகள், ''விரிவிலா அறிவிஞர்கள் வெவ் வேருய்ச் சமயம் செய்து - எரிவினுற் சொன்னுரேனும் எம்

* SIVAGNANA BODHA VILAKKAM - By Srilasri Manickavasaga Gnana Desiga Swamigal - Page 6, 7.

பிரார்க்கு ஏற்றதாகும்'' என்ற தேவாரவரிகள், தமிழரின் பரந்த அறிவையும் செறிவையும் காட்டுவனவாகும்.

தமிழரிடையே விளங்குகின்ற சங்க இலக்கியங்கள் தமிழரின் உயர் நாகரீகத்தை விளக்குவன. திருமுறை இலக்கியங்கள் தமிழரின் தலைசிறந்த மெய்யறிவுத்திறனை மெய்ப்பிப்பனவாகும். சங்க இலக்கியத்தோடு நிற்கின்றவர் செந்தமிழ்ப் பயன் அறியாதவர் ஆவர். திருமுறைகளே உயிர்க்கு உறுதி பயக்கும் நூல்களாகும். "ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் அறிகிலார்'' (திருவால: தேவாரம்) என்றதொடர் வினையினீங்கி விளங்கிய அறிவொடு முனைவனைச் சார்தலை மொழிந்து நிற்கும்.

சங்க நூற்குறை:

அறம்,பொருள்,இன்பம் ஆயமூன்றுமே சங்கநூல்களில் இளங்கோதி, வீட்டை விட்டனர்; திருவள்ளுவரும் விட்டார்; பரிமேலழகர் விட்டதற்குச் சமாதானம் சொன்னார்; வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லாநிலைமைத்து என்றும், அதனைத் துறவறமாகிய காரணவகையால் கூறப்படும் என்றும் கூறிச் செல்வர். சங்ககாலத்தில் நூலாசிரியர்களால் விடப்பட்ட குறையை நிறைவு செய்வன திருமுறை நூல்களாகும்.

நெறி எது?

நம்பிக்கைமாத்திரத்தால் தெய்வத்தை வழிபட்டுச் சாமானிய அல்லல்கட்குப்பரிகாரம் தேடிக்கொள்வது பாமரமக்கள் சமயநிலையாகும். அவர்கள் செயல்களே சமயம் எனக்கொண்டு நெறிஎனப் போற்றுவது அறிவுடைமையாகாது. சமய அறிவும் அனுபவமும் உடையவர்கள் சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டிய வாழ்வியல்தான் சமயவாழ்வு எனப்பெறும். அத்தகைய சான்றோர்கள் வாழ்வையும் சமயதத்துவ நூல்களையும் ஆராய்ந்துதான் சமயநெறி நல்லதா? இல்லையா? என முடிவு செய்யவேண்டும். அவ்வகையில் இந்தியநாடு, குறிப்பாகத் தென்றமிழ்நாடு தத்துவக்கடலைக் கடைந்து சைவசித்தாந்தச் செந்நெறி என்ற அமுதத்தை உலகிற்கு வழங்கி உளது. சைவநெறியில் அடங்காத தத்துவக் கொள்கைகளோ, சிவாலயங்களில் காணப்படாத மூர்த்தி வழிபாடுகளோ, உலகு

எங்குமே இல்லை எனலாம். சைவநெறி ஒன்றிலேதானே முப்பொருள் உண்மை முழக்கப்படுகிறது; சிவானந்தக் கடலுள் ஒன்றும் இரண்டும் அறத்தோய்வதற்கு வழிகாட்டப் படுவது சைவநெறி ஒன்றில்தான், இயங்கும் பொருள், இயங் காப்பொருள்-நிற்பனவும் சரிப்பனவும் சைவமாகும் - என்று பேசியநெறி, சைவநெறி ஒன்றேதான். அதனால்தான் பேரா சிரியர் உரை கூறியதைப்போல 'கண்டாரால் விரும்பப்படும் தன்மை உடைய நெறி' - 'திருநெறி' எனப்பட்டது. மற்றை நெறிகள் மாற்றத்தை அளிப்பன; திருநெறியோ மாறிலா மகிழ்ச்சியைத் தருவது; இறவாத இன்ப அன்பைத்தருவது. சித்தத்தைச் சிவன்பால் வைத்த — அறிவாற் சிவனேயாகிய செந்தமிழ்ப்பரமாசாரிய மூர்த்திகள் திருவாய்மலர்ந்த பாக்கள் திருநெறிய தமிழ் ஆகும். **இத்தமிழ் ஒன்றே செந்தமிழ்ப்பய னாகும். செந்தமிழ்ப் பயனாவது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குதலாகும். உருகும் நலத்தை உண்டுபண்ணும் தன்மையது திருநெறிய தமிழாகும்;** அடியார் சிந்தனையுள் தேனூறி நிற்க வைப்பது திருநெறிய தமிழாகும்.

மந்திபோல் திரியும் மாக்களை, அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லவைப்பது திருநெறியதமிழாகும். வேண்டு வார்க்கு வேண்டுவன நல்கும் வெறுக்கை திருநெறிய தமி ழாகும். **இத்திருநெறிய தமிழை அருளியவர்கள் பசுகரணம் மாறிச்சிவகரணமானவர்கள் ஆதலால் இத்தமிழொன்றே தவத் தைத்தருவது;** ஞானத்தை நல்குவது, வீட்டை எளிதாக்குவது.

குமரகுருபரர் வாக்கு:

இத்திருநெறிய தமிழின் பெருமையைக் **குமரகுருபர சுவாமிகள் திருவாக்கில் வைத்து உணரலாம். 'செந்தமிழ்ப்பயன்' எது எனத்தெரியாது மயங்கிய நமக்கு, மீனாட்சி அம்மையையே 'செந்தமிழ்ப்பயன்' எனச் சுட்டுகிறார்.**

> **"தொடுக்குங்கடவுட் பழம்பாடற்**
> **றொடையின் பயனே"**

என்ற மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் 'கடவுட்பழம்பாடல்' என்பது திருமுறையைக்குறிப்பிடும். ஆதலின்அச்செந்தமிழ்ப்

பாடற் பயனாக விளங்குபவன் என்பதை அறிந்து மகிழ வேண்டும். முத்தப் பருவத்தில்,

> "காலத்தொடு கற்பனை கடந்த
> கருவூலத்துப் பழம் பாடற்
> கலைமாச் செல்வர் தேடிவைத்த
> கடவுண் மணியே"

என 'கருவூலத்துப்பழம்பாடல்' என்று குறிப்பிடுவது திருமுறையையேயாகும்.

திருமுறைத்தமிழ் இறைவனுக்கு நுண்ணுடம்பு எனப்படுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் சிறப்பிக்கப்படுவது திருநெறிய தமிழில்தான். சாத்திரமாகவும் தோத்திரமாகவும் நின்று சாமானிய மக்களையும் நல்வழிப் படுத்துவது திருநெறிய தமிழ்தான். இத்தமிழ் ஒன்றே சீவன்முத்திநிலைகூட்டுவதாகும் அதனால்தான் மதுரைக் கலம்பகத்தில் குமரகுருபரசுவாமிகள் கொழிதமிழ்ப் பெருமையைக் கூட்டி உண்ணவேண்டும் என்ற ஆர்வத்தினால் அம்மை தடாதகாதேவி என்ற பெயரோடு தோன்றியதும், இறைவன் சோமசுந்தர பாண்டியனாக எழுந்தருளியதும் முருகன், பாண்டியன் உக்கிரப் பெருவழுதியாகத் தோன்றியதும் எனக்காரணங் கற்பிப்பார். எனவே நறவு கொப்பளிக்கும் - நறைபழுத்த துறைத்தீந்தமிழின் சுவையினைக் கொழிதமிழ்ப் பெருமையை–யாரே அறிவர்? இவ்வாறு வினை விடுப்பார் குமரகுருபர அடிகளார்.

திருநெறிய தமிழையே செந்தமிழ் உணர்ந்தோர் ஓத வேண்டும். திருநெறிய தமிழைப் போற்றாத அறிவினரின் வாக்கினில் முத்தமிழ்ச் சுவை சொட்டினாலும் நம்மை மந்திபோல் ஆக்கும் தன்மையே விளங்கும். செந்தமிழ்ப்பயன் உணர விரும்பும் உண்மைத்தமிழர்கள் திருநெறிய தமிழைத் தெருவெலாம் பரப்ப வகை செய்வாராக. வாழ்க திருநெறியதமிழ்!

திருமந்திரம் TIRUMANTIRAM

ஆறுந்தந்திரம் Tantra the Sixth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

(மலர் 19. இதழ் 5-ன் தொடர்ச்சி)

அறிவென்றும் அறியாமையென்றும் கூறப்படும் வேற்றுமையைப் போக்கினுன்

He obliterated from me the distinction between Knowledge and Ignorance.

37. முன்னை யறிவறி யாதஅம் மூடர்போற்
பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான்
தன்னை யறியப் பரனுக்கித் தற்சிவத்
தென்னை யறிவித் திருத்தினன் நந்தியே.

Even as the fools here below know not knowledge from ignorance.
He dispelled in me the distinction between the two in the life herefter;
And he made me know my Self;
And so made me know Him:
He transformed into the Spirit Cosmic,
And intimated me into the very Siva;
There, to abide for ever,
—He, Nandi of hallowed name.

முன்னை நான் உலகத்து வாழ்ந்தபோது, அங்கே மூடர்களுக்கு அறிவென்றும் அறியாமையென்றும் எவ்வாறு வேற்றுமை கண்டு கொள்ளமுடியாதோ, அது போலவே இந்த பின்வந்த என் நிலையில், அறிவு அறியாமை என்ற வேற்றுமையைக்கண்டு கொள்ளாதவாறு செய்தான். என்னை எனக்கு அறிவித்து, பரனுக்கி, அந்தசிவத்திலே நிலைபெற்ற பரஞானத்தோடிருக்க நந்தி அருளினுன்.

குறிப்பு, வரி 1–2. *மூடர்களுக்கும் முத்திபெற்றவர்களுக்கும் ஞானம் அஞ்ஞானம் என்ற பேதமில்லை என்றவாறு.*

நந்தி காட்டிய அற்புதங்கள்
The wonders that Nandi showed

38. காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங்
கோணாத போகமுங் கூடாத கூட்டமும்
நாணாத நாதமும் நாதாந்த போதமுங்
காணா யெனவந்து காட்டினன் நந்தியே.

"Behold thou, he said:
The eye that seeth not
The ear that heareth not;
The rapture that cloyeth not,
The union that uniteth not;
The Nada that yieldeth not,
The Bodha that speaketh not;
All these, behold thou," he said,
And showed them too
—He, the Nandi of immortal fame.

"காண்கின்றோம் என்ற உணர்வில்லாது காணும் கண்களும், கேட்கின்றோம் என்ற உணர்வில்லாது கேட்கும் கேள்வியும், குறைவென்பதே இல்லா (சிவ) போகமும், கூடியிருக்கின்றோம் என்ற உணர்வில்லாத (ஜீவசிவ) க்கூட்டமும், திரிவுபடாத நாதமும், நாதத்தின் அந்தமாகிய பேச்சற்ற போதமும் - இவையனைத்தும் வந்துகாண்க" - என்று சொல்லி, நந்தி யெம்பெருமான் எனக்குக் காட்டிச்சென்றனன்.

மோனத்தில் வருவன
Mona's emanations

39. மோனங்கை வந்தோர்க்கு முத்தியுங் கைகூடும்
மோனங்கை வந்தோர்க்கு சித்தியும் முன்னிற்கும்
மோனங்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்
மோனங்கை வந்தைங் கருமமும் முன்னுமே.

They that have mastered the Divine Silence of Mona
Shall reach the very bliss of Mukti;
And all siddhies of themselves seek them
Into the Silent Word it shall in perfection evolve;
Mastering Mona thus,
They shall gain the powers for the five divine acts
— Creation, Preservation, Destruction, Obscuration and Grant of Grace.

மோனம் கைவரப்பெற்றோர்க்கு முத்திகைகூடும்; சித்திகள் அவரை நாடிவரும்; மோனம் முற்ற அசபா மந்திர ஞானம் சித்திக்கும்; பஞ்சகிருத்தியங்களையும் செய்யும் ஆற்றலும் பிறக்கும்.

குறிப்பு. வரி 3. *ஊமை மொழி – செபித்தலில்லாத (அசபை) சூக்கும பிரணவம். நாலாந்தந்திரம் "அசபை" யை நோக்குக.*

குரு பாதத்தே பெத்தமறுத்தல்
Sunder the bonds of birth at the feet of Guru

40. **முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றன்பால்**
வைத்த கலைகால் நான்மடங் கான்மாற்றி
உய்த்தவத் தானந்தத் தொண்குரு பாதத்தே
பெத்த மறுத்தோர் பிறந்திற வாரே.

Having achieved the divine Mudras three,
Directed the breathing into the Nadi three,
And coursed its rhythm in finger-measure four,
— They who sate thus in yoga,
Joyous at the lumniscent Guru feet,
Have for ever sundered bonds all,
And never be born and dead again.

மூன்று முத்திரைகளையும் முடித்து, இடபிங்கலைகளில் ஓடிய மூச்சைச்சுழுமுனையில் ஏற்றி, நான்குவிரல் மாத்திரையளவாக மூச்சுமாற்றி, பிரகாசம் பொருந்திய குருவின் பாதத்திலே ஆனந்தத்தோடு தவத்தில் ஆழ்ந்தவர்கள் பாசத்தளையை அறுத்தவராவர். பின்னே அவர்களுக்குப் பிறப்பிறப்பில்லை.

குறிப்பு. வரி 1. *மூன்றன்பால் – சுழுமுனையில்*
2. *கலைகால் – இடகலை: பிங்கலைகளில் ஓடியமூச்சு*
3. *உய்த்தவத்து – தவத்தில் அமர்ந்து.*
முத்திரை மூன்றுவன – தானமுத்திரை, ஞானமுத்திரை, மோனமுத்திரை என்பன. தானமுத்திரை சதாசிவநிலையையும், ஞானமுத்திரை சிவத்துவநிலையையும், மோனமுத்திரை முந்தாந்த முத்திநிலையையும் அளிக்கவல்லன. 7–ம் தந்திரம் "முத்திரைபேதம்" நோக்குக.

ஞேயத்தில் மூலச்சொருபநிலை

In Gneya is the Premial Form of the Spirit

41. மேலைச் சொருபங்கள் மூன்று மிகுசத்தி
பாலித்த முத்திரை பற்றும் பரஞானி
ஆலித்த நட்டமே ஞேயம் புகுந்தற்ற
மூலச் சொருபன் மொழிஞா துருவனே.

As he seizeth the Mudras three of divine potent
The Gnani Supreme attaineth the Higher Forms three;
And in that rapturous dance he entereth the Gneya
And himself the Premial Form of the Spirit becometh;
— Thus I spake, the knower of Truth.

மூன்று முத்திரைகளையும் பயின்ற அளவிலே, அவற்றின் தெய்வீக ஆற்றலால் பரஞானிக்கு மேலைச்சொருபங்கள் மூன்றும் வந்தடைகின்றன; ஆனந்த நட்டம்பயின்று ஞேயத்திலே புகுகின்றான்; புகுந்ததும், முன்கூறிய மூன்று சொருபங்களையும் கடந்த மூலச்சொருபநிலை வந்தடைகின்றது - இங்ஙனம் ஞாதுருவனாகிய நான் மொழிகின்றேன்.

குறிப்பு. வரி 1. மேலை முச்சொருபங்களாவன — ''பேதம், அபேதம், பிறழாத ஆனந்தம்'' என்றனர் ஒன்பதாந்தந்திரம் ''சிவசொருபதரிசன''த்தில். இவற்றையே முன் பாட்டில் சதாசிவநிலை, சிவநிலை, முத்தாந்த முத்தி நிலை என்று குறித்தோம்.

4. மூலச்சொருபன் — மேலை முச்சொருபங்களுக்கும் அப்பால்நிலை; துரியத்தில்பிறப்பது; அதுவேநிருவாணம் எனவும்பெறும். ஒன்பதாந்தந்திரம் ''முத்திநிலை'' பார்க்க.

CHAPTER II

SRI KALAHASTEESWARA SWAMY

LORD Siva is the bestower of Gnana and Mukti to Mankind. He is the source and the essence of the Vedas. He resides in the hearts of his devotees. He is the Destroyer of the Tripuras which symbolise the Sthula, Sukshma and Karana Sareera's (or bodies). This three-eyed Lord, whose ornaments are cobras, the one who delights in wearing a deerskin, One who is the embodiment of Ananda or Joy, this Lord who is the consort of the Divine Mother Parvati has manifested Himself at Sri Kalahasti in the form of a Linga. The linga at Kalahasti is one of the sacred Pancha-Lingas of the Universe. The Pancha-Lingas are the Prithvi (Earth), Jala (Water), Agni (Fire), Vayu (Air) and Akasa Lingams (Sky.) The Lingam at Sri Kala-hasthi is a Vayu Lingam or Air-Lingam and is said to have manifested Himself, at the time of the creation of the Universe. The Lingam is made of air, and therefore He cannot be seen but felt. The flickering lamps in the Lord's sanctum-sanctorum in the temple are proof and evidence of the manifestation of the Vayu-Linga.

Another Self manifested Lingam in the temple which is visible to mortal eyes is that of Sri Kalahas-teeswaraswamy. This Lingam is as old as the Vayu-Lingam and is considered very sacred. The Lingam is not less than four feet high; the Spider (Sri), the Elephant's twin Tusks (Hasti=Elephant) and a five headed Cobra (Kala), and an eye which was offered

The above article is reproduced with the kind permission of the Trustee of 'Sri Kalahasthi Temple',

by Kannappa, the Lord's devotee are manifested on this Lingam. Sri, Hasti and Kala, worshipped the Linga here and obtained Mukti. The Lord is therefore also called Sri Kala Hasteeswaraswamy The town where the temple exists is also called Sri Kalahasthi in honour of these devotees of Lord Siva. The famous legends of devotion of these blessed souls are mentioned briefly elsewhere in this booklet.

We bow down to this Lord of Kailasa and Pray to him thus:

Oh! Supreme Lord! Siva! Let my mind worship thy twin lotus feet; Let my speech be for uttering thy praises, Let my hands be for thy worship; Let my ears hear only thy glory. Let my eyes be only for adoring thy splendid 'Murthi.' Consequently of what use are other books and texts to me?

The main temple for Sri Kalahasteeswaraswamy is about 90 feet in length (KKK in the topo sketch). It consists a big closed mantapam (L1) before the shrine and the shrine proper. The actual shrine for Sri Kalahasteeswara consists of the Swamivari Garbha Gudi and two Antarala Gruhams just before it one outer and an inner Antarala Gruham. There is a Pradikshana Patha also around the main shrine. Full particulars of these mantapams and Antarala Gruhams are given in Chapter-V.

The Swamivari Garbhagudi houses the famous Sri Kalahasteeswaraswamy Lingam as well as the famous Vayu Lingam. The Lingam of the Sri Kalahasteeswaraswamy is found manifested on a small raised platform about three feet high. This square platform is actually the Panavattam for the Self-manifested

Lingam of Sri Kalahasteeswaraswamy. The square shaped Panavattam is about 4 feet in length, with an arrangement to drain off abhishekam water to the left. The Lingam on the Panavattam is about five feet high. The Lingam is also uniquely shaped. The upper portion of the Lingam is seen with three ridges on the front extending from the bottom and the centre of the Linga, dividing the Linga into five parts at the top. Five 'Snake-head' like protuberances are to be seen at the top. According to legend these represent the five heads of the 'Kala' of Cobra which worshipped Lord Siva here and attained ultimate Union with Lord Siva. Two other tusk-like structures at the bottom of the Linga depict the tusks of the elephant or 'Hasti' which worshipped the Lord here and attained Mukthi. A small cavity at the bottom portion of the Linga is the 'Sri' or Spider which worshipped Lord Kalahasteeswaraswamy. On the right side of the top portion of the Linga on the tubular portion of the Lord's Lingam is to be seen a small eye-like formation. This is not conspicuous. According to legend, this is one of the eyes offered to Lord Siva by Kannappa, the Lord's devotee. Usually a gold cover is placed around the Siva Linga. On special occasions, when Abhishekam or Harathi is given to the Lord, the cover is removed by the Priests belonging to the Gurukal family and Viswaroopadarshanam of the Lord given to His devotees. It is also worthy of note, that the Lingam here cannot be touched by the devotees. Worship in the temple is permitted only by the Priests belonging to the Gurukal family.

BHOGAMURTHI

At the bottom of the platform is to be seen, the Bhogamurthi of Lord Kalahasteeswara. This is a very

rare Panchalohamurthi of Lord Siva. Siva is shown here seated in the Sukasana pose and holds the Parasu and the Mruga in his upper arms while the lower right hand and left hands are in the Abhayahastha and Simhakarnamudra poses. Details of this Bhogamurthi are given in Chapter-V.

SRI AMMAVARU:

A standing stone figure of the Mother of Sri Gnana Prasannambika is also seen behind the Linga in the corner on the floor. She is represented as a standing figure with two hands. The right hand is in the Katakashasta pose holding a Neelothpala while the left hand is seen dangling freely.

VAYU LINGA:

The Vayu Lingam is manifested to the right of the stone Lingam of Sri Kalahasteeswaraswamy. As it is an 'Air Lingam' it is not visible but can be felt. There is a huge bronze 'Deepa Semma' (lamp stand) here. This is a fixed lamp stand with lighted oil lamps. In all there are about five lamps in the Garbhagudi here. The Vayu Lingam is present here. It is worth noting that the lamps are non hanging lamps but fixed lamps fixed to the 'Deepa Semna.' There are two lamps at the top and three at the bottom. As has been polnted out this is one of the five primordial Lingas of India. The other Lingams are to be found at Tiruvannamalai, Chidambaram, Jambukeswaram and Conjeevaram. The Lingam at Tiruvannamalai is said to he a Thejolingam. According to the legend Brahma and Vishnu once had an argument about their relative merits. Lord Siva then appeared to them as a Jyotirlingam Brahma and Vishnu were then called upon to investigate the beginning and end of this Jyotir-

lingam. Brahma then took the form of a Swan and Vishnu the form of a boar to investigate the Lingam. Their efforts were in vain. Lord Siva is then said to have taken the form of a Linga at Tiruvannamalai, and blessed them. The second primordial Lingam is the 'Akasa Linga' at Chidambaram. The Akasa Lingam (Akasa=Sky) is said to be manifested to the right of Lord Nataraja at Chidambaram, on and near the wall in the Kanakasabhapathi's Sabha. A Prabha of golden bilva leaves hanging in this temple shows the place where the Akasa Linga is manifested. The Akaaa Lingam is also called Chidambara Rahasyam. The third primordial Lingam is the 'Appu' Lingam or water Lingam of Jambukeswaram (also known as Tiruvanaikkaval). This place is situated at about a distance of one mile from Srirangam. The Lingam here is to be found under a Jambu tree in water, in the temple on the banks of the river Cauvery. According to legend, Sri Parvathi, the Lord's consort is said to have made this Lingam out of water particles here and commenced worship. The Mother worshipped at Jambukeswaram is Akilandeswari. To this date She is said to worship Lord Siva at Jambukeswaram (as a Kumari) at noon everyday. The fourth primordial Lingam is the Prithvi Lingam at Conjeevaram. This is to be found in the Ekambareswara temple at Kanchi. According to legend, once Parvathi in a playful mood is said to have closed the eyes of her consort for a moment. This resulted in chaos; Lord Siva is then said to have directed Parvathi to perform penance for Her misdeed. The Mother performed penance at Conjeevaram under a mango tree. She máde a Siva Linga out of sand and worshipped it for ages. Lord Siva is said to have tested her devotion

by ordering a deluge to wash away the Prithvi Linga but the Mother protected the Linga by embracing it. Lord Siva then gave her darshan at Conjeevaram. This Prithvi Lingam at Kanchi is worshipped to date. The fifth and last primordial Lingam is the Vayu Lingam of Kalahasti. As has been indicated above there are five Lamps in the Garbha Gruha of the Kalahasti temple and though no breeze whatsoever can enter the inner sanctum-sanctorum, the lamps at the top and bottom fixed to the 'Deepa Semma' near the door are seen flickering always at Kalahasti. One cannot explain away this phenomenon as one due to convection of air currents. If two lights are fixed one above the other in a closed room, the upper lamp could flicker as a result of convection of air currents. In Kalahasti however, all the lamps where the Vayu Lingam is manifested are to be found flickering. The lights are not hanging lamps as alleged in the North Arcot District Manual complied by Cox. The story written by Cox giving a Pseudo-scientific explanation is only a Cock and Bull story without any basis. The flickering of all the fixed lamps is a phenomenon which cannot be explained away on the hypothesis of air currents.

Sri Kalahasteeswaraswamy is a 'Karuna Nidhi' bestowing the world's choicest blessings on His devotees. He is a Deity who bestows Vignana on his devotees and gives them ultimate Mukthi. It is on account of this that Sri Kalahasti is renowned throughout India as a Vignana Kshetra.

செந்தாமரையும் பைங்காவியமும்

திருமதி. அனந்தலக்ஷ்மி சுப்ரமணியம் அவர்கள், M.A., B.T.
5, விநயக முதலிதெரு,
சென்னை – 1.

இன்பத்தில் இம்மண்ணுயிரையெல்லாம் திளைக்கவைக்கும் இறைவன் களிநடம் புரிகிறான் ஒரு அழகிய சோலையிலே. இயற்கை யன்னையின் இன்பக் களியாட்டத்தின் ஒவ்வொரு அசைவும் கண்டோரைக் கிறங்க வைக்கும். காலங்களின் இனிமைமிக்க வசந்தகாலம். எங்கும் முல்லையும், மல்லிகையும் தன் நளின முறுவலுடன் தலையசைத்து வரவேற்கும், தென்றல் இன்பத்துடன் நம்மைத் தழுவிக்கொள்ளும் உற்ற நண்பன் போல். இறைவன் இன்பத்தில் ஆசை கொண்டவன் தானே! அவன் தன் மகிழ்ச்சி பொருந்திய முகத்தை, உதிர்க்கும் சிரிப்பைத் தன் ஆடியென விளங்கும், நீணிற பொய்கையிலே பார்த்துக் கொள்கிறான். அவனுடைய பிரதி பிம்பங்களைத்தான் காண்கிறோம் நற்றாமரை மலர்களாக. இவ்வுயர்காட்சியைக் கண்டு அநுபவிக்கிறது மக்கட் கூட்டம். அன்றாடம், ஆசையெனும் மணல் மாளிகை கட்டி, துன்பமெனும் வெள்ளத்தால் அழிந்தவுடன் அலமந்து நிற்கும் மனித இனம் அல்லவே அது. பாசம் பந்தம் எனும் பெரும் புயலினின்றும் தப்பிஓட, நத்தையின் ஓடுபோல, இலக்கிய உலகம் என்னும் அரும்பெரும் கூட்டில் வாழும் உயிரினங்கள் அல்லவா இவை? இவ்வுயிரினங்கள், ஓட்டுக்குள் முத்தை வைப்பதுபோல், கூட்டுக்குள் தேன் சேர்ப்பது போல், எல்லா எழிலையும் தன் உலகிலேயே சேர்த்து வைத்து, மற்றோர் மகிழ அளிக்கும் புலவர் கூட்டம் அல்லவா இது! இக்கூட்டம் இச்சோலைக்குள் நுழைந்ததன் பலன்? ஒருவன் தென்றலைத் தன் உற்ற நண்பனாய் கொண்டு அழியா இடம் அளித்தான், மற்றவரோ செந்தாமரையுடன் சேர்ந்து இன்புற்றார்! இன்பத்திலும் துன்பத்திலும் செந்தாமரையைத் தன் தோழியாய்க் கொண்டார். இங்கேதான் இம்மாண்பைக் காண்போமே!

ஒருவன் தென்றலை பார்க்கிறான். மாலைக்காலம், அவனைத் தழுவிக்கொண்டு தென்றலும் அவனுடன் சோலைக்குள் செல்கிறது. ஒருவர் நம் வீட்டிற்குள் வந்தால் அவரைத் தழுவி அழைத்துச் செல்வது போல். நேரே சென்றதும் என்ன செய்கிறது தெரியுமா? முதலில், அங்கு மகிழ்ந்து சிரித்துக் கொண்டு இருக்கும் தாமரை மலரைத் துழாவுகிறது. அங்கிருந்து, தாமரையின் நன்மணத்தைச் சுமந்து கொண்டு, நேரே முல்லைப் பந்தர்க்குள் நுழைகிறது. அங்கு அப்பொழுது தான் வெடித்துக் கொண்டிருக்கின்றன முல்லைமலர் அரும்புகள். அவற்றைப் பார்க்கும்போது, சிரிப்பை அடக்க முடியாமல் ''களுக்'' என முல்லைப்பல் காட்டிச் சிரிக்கும் நங்கையர் நினைவுக்கு வரும். அப்படி சிரித்து மகிழும் நங்கையரிடம் பொருள் பெறத்தக்க இடமும் சமயமும் இதுதான் என்பதுணர்ந்த தென்றலும் முல்லையினின்றும் மல்லிகையினின்றும் அவற்றின் மணத்தைப் பெற்றுக்கொண்டு செல்கிறது. இதைக்கண்ட ஆசிரியனுக்கு – உயர் கவிஞனுக்கு கற்பனை பறவை சிறகடித்துப் பறக்கிறது. அவனுக்கு அத் தென்றல், பொருள் வசூலிக்கும் கடன்காரன் போலத் தெரியவில்லை; அல்லது வீடு வீடாக படியேறி பொருள் பெற்றுச் செல்லும் இரவலன் எனவும் தோன்றவில்லை. ஆனால், தென்றல் கவிஞன் முன் உயர் மாணவன் ஆக மாறிவிட்டது. ''கலை எங்கே? கல்வி எங்கே? நான் பெரு அரும் பெரும் செல்வமாம் பேரறிவு எங்கே? எங்கே?'' எனத் தேடிச் செல்லும் உயர்ந்த தலைசிறந்த தலைமாணாக்கனாய் மாறிவிட்டது. இது கவிஞனின் தனிசிறப்பைக் காட்டும். இதனை இவன் வாய்ச் சொல்லே விளக்கும்.

> ''பொங்கரின் நுழைந்து வாவி புகுந்துபங் கயந்து ழாவிப்
> பைங்கொடி மயிலை முல்லை மல்லிகை பந்தர் தாவிக்
> கொங்கலர் மணங்கூட் டுண்டு குளிர்ந்துமெல் லென்றுதென்றல்
> அங்கங்கே கலைகள் தேரும் அறிவன் போல் இயங்குமன்றே''
>
> *[திருவிளையாடற் புராணம்].*

இப்படித் தென்றலோடு உறவாடிய கவிஞர் கூட்டம் தம்மை இன்முகத்துடன், வீட்டிலே இருந்து வாயிலுக்கு வெளியே வந்தழைக்கும் பெண்டிர் போல், நீரினின்றும்

தம்மை அழைக்கும் தன்மையை மறக்கவில்லை. இன்பமாய் நீரில் மிதக்கும் தாமரை மலரைக் கண்டவுடன் தம் குடிப் பெண்கள் நினைவுக்கு வந்து விட்டார்கள். அவர்கள் எப்படிப் பட்ட பெண்கள்! தாமரை போன்றவர்தாமே! சிறந்த இதழ் களை உடையமையுண் கண்கள்என்றும் தாமரை மலர்கள், தாமரை முகத்தில் தானே மலர்ந்தன. அவர்கள் செவ்விய பாதங்களும் உயர்கைகளும் தாமரைதான், இப்படி உயர் தாமரைகள், இச்சுனையின் கண் பூத்து நிற்கும் தாமரையோடு கலந்து நிற்பின் நம்மால்தான் வேறுபாடு கண்டறிய முடியுமா? முடியாதே 'தமக்குள்ளேயே வேறுபாடு தெரியாமல் பின்னிப் பிணைந்து அல்லவா நிற்கும்' என எண்ணி வியக்கிருன் ஒரு புலவன்.

'பைஞ்சுனைப் பாஅய் எழு பாவையர்
ஆயிதழ் உண்கண் அலர்முகத் தாமரை
தாள்தா மரைத்தோள் தமனியக் கயமலர்
. . . .
புனல்தா மரையோடு புலம்வேறு பாடுருக்' [பரிபாடல்].

இயற்கையின் எழிலோவியமாய், அமைந்து நிற்கும் தாமரையைப் பார்த்துக் கொண்டே வந்தான் கம்பன் என்னும் உயர்கவிஞன். அப்பொழுது அவன் கண்களுக்குள் வரும் காட்சியெல்லாம் அவர் பெற்றதலைவன் உற்ற நண்பன். இராமன் அயோத்திக்கு வருவதுதான். தசரதன் அரண் மனையை நோக்கி இராமன் வீதியிலே நடந்து போகிருன், அந்த உலாவைக் காண உன்னத பெண்கள் காத்து நிற்கின் றுர்கள். எங்குபார்த்தாலும் எண்ணிறந்த மகளிர் கூட்டம் மொய்த்துக் கொண்டிருக்கின்றன. எங்கேயும் பெண்கள் முகந்தான் தென்படுகின்றன. அவிழ்ந்த கூந்தல், காதில் குண்டலம். அங்கும் இங்கும் அசைந்தாட, வாளும், வேலும் கருவண்டும் கெண்டைமீனும் ஒன்றுகூடி இருக்கும் அழகுக் கலவையான கண்கள் இப்படி எத்தனை எத்தனையோ அழகு சொட்டும் முகங்கள். இதனைப்பார்த்த கலைஞனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இதென்ன! நம்தலைவனைக் காண, வரவேற்க சாளரமெல்லாம் தாமரைக்காடு, பூத்துவிட்டதே என்று பர வசம் அடைகிருன்

"நீள்எழுத் தொடர் வாயினும் குழையொடு நெகிழ்ந்த
ஆளகத்தினோடும் அரமியத் தலத்திலும் அலர்ந்த
வாள் அரத்தவேல் வண்டொடு கெண்டைகள் மயங்க
சாளரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்"

இதனைக் கேட்கும் மகாகவி காளிதாசனுக்குத் தன் ஊரில் நடந்த அஜன். இந்துமதி நினைவு வந்துவிட்டது. அஜனும் இந்துமதியும் உலாசெல்லும்போது பெண்கள் அழகு மீனெனத்துள்ளும் தன் கண்களைச் சுழன்றுகின்றார்கள். அவர்களிடம் இருந்து மதுவின் மணம் மிதந்து வரும், மலரின் மணம் போல. கருமையான பெரிய கண்கள், பூவில் புரளும் கருவண்டுகளை நினைவுறுத்தும், அப்பொழுது அவர் முகங்கள்'. ஒன்றுமில்லை புத்தம் புது தாமரை மலர்கள். அதுவும், ஆயிரம் இதழுடைய தாமரை மலர்கள். தாமரைமலர்கள் பொய்கையில் மட்டும் மலராமல் சாளரங்களிலும் வளர்ந்துவிட்டதே; என்று எண்ணி மயங்கினான். என்ன இருந்தாலும் இக்கவிஞன் மலரின் மலர் மலர கண்டு மகிழ்ந்தவன் தானே! அவன் இலக்கிய உலகில்தானே, தாமரை மலரில் குவளை மலர்கள் பூத்ததுபோல் உயர்முகத்தில் இரு நற்கருவண்டுகள் சுற்றுகின்றன.

தன் தலைவனின் ஊர்வலம் பார்த்த கம்பனுக்குத் தன் நண்பனின் முகம்தான் நினைவுக்கு வருகிறது. இதுவரை பெண்களைப் பார்த்தால்தான் தாமரை நினைவிற்கு வரும் என்று நினைப்பவர்களுக்கு ஒருசவுக்கடி தருகிறான். கம்பன் அவன் இராமன் முகமே தாமரைதானே: அதுவும் எப்படிப் பட்ட தாமரைமலர் என்றும் வாடாத சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரைதானே? பொய்கையில் இருக்கும் உண்மை மலர்கள் கூடதன் உணர்ச்சியைக் காட்டுகிறது. பாருங்கள் தன் உற்றதலைவன் வருகிறான் என்றவுடன் ஆதவனைப்பார்த்தவுடன் மகிழ்ச்சியுடன் பெருமையுடன் முகமலர்ந்து சிரித்து நிற்கிறது. அதேசமயம் தண்ணிலவு வரட்டும் அப்போது. முகத்தைச் சுளுக்கிக் கொண்டு வாடி தலைகுனியும். இப்படி மலர்காட்டும் உணர்ச்சியையெல்லாம் இராமன் காட்டுவானா? இல்லவேஇல்லை. அவனுக்கு இவ்வுலகத்தில் எல்லாமே ஒன்றுதான். பாசம் பந்தம் இன்பம் துன்பம் எல்லாம் அவ

னுக்குத் தூசு. அதே காரணத்தால் தான் "நீ நாளைக்கு முடி மன்னன்" என்று தசரதன் பாராட்டியபோதும் புன்சிரிப் பைத்தான் உதிர்த்தான். "இச்சொத்தையெல்லாம் விட்டு கானடைவாய்" என்று கூறினபோதும் கலங்காத கண்களும் மாறாத புன்சிரிப்பும் இருந்தன. இதனைப்போன்ற தன்மை தாமரைக்குஉண்டா என்ன? அவன் ஓவியன் தீட்டிய அன்றலர்ந்த தாமரையே அன்றி, உண்மையில் தோன்றி வாடி விடும் மலரல்ல என்று கண்டறிந்தான். ஒருகவிஞன் வாடும் மலரைப்பார்த்தவுடன் வாடாதமலர் எப்படித் தோற்ற மளிக்கும் என நினைக்கிறான். அதனையே தன் தலைவன் இராமனுக்கும் அளித்து விடுகிறான்.

"மெய்த்திருப் பத மேவென் றபோதினும்
இத்தி ருத் துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தி லலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை யுன்னுவாள்" [காட்சிப்படலம்]

இப்படி, தாமரைக் குளத்திலே தன்னைப் பறிகொடுத்து நின்றது புலவர் கூட்டம். அவர்கள் அகமலர்த் தாமரை மலர்ந்தன. அவர்கள் சிந்தனைப்பொய்கையில் பாத்தாமரைகள் செறிந்து காணப்படுகின்றன. இத்தாமரைகண்ட இரசிகர் முகத்தாமரை மலர்களும் மலர்ந்துவிட்டன. அதன்பலனாக; நம் உள்ளத்தாமரை. கரங்கள் என்னும் நற்றாமரையும் கூம்பி இறைவனை வணங்கும். தாமரை யளித்த தாமரை சேவடியை வணங்குதல் நம் மரபுதானே!

ST. RAMALINGAR AS A RELIGIOUS REFORMER.*

Thiru. P. Mutharasu Avl., M. A., B. T.,
Professor of Tamil,
Sri K. G. S. Arts College, Srivaikuntam.

(மலர் 19. இதழ் 5-ன் தொடர்ச்சி)

HIS PERSONALITY:

"St Ramalingar was an ecstatic poet, a saint and mystic, a man of most profound compassion towards all life and one of the greatest of our spiritual explorers."[16] His universal love knew no bounds. There is no difference between compassion and himself and that if he has to part with compassion he will be no more.[17] This is amply revealed in his monumental work "Thiruvarutpa" and other prose works, which are impregnated with the idea of Universal Love and Universal Brotherhood. It is his name that is remembered by all Tamils whether here or abroad now, and it is his book, Thiruvarutpa that is widely read and enjoyed by the public in all walks of life, whereas the names and works of others in that century have practically sunk into oblivion. His life is a noble heritage of all the good that his predecessors said and did. His is a powerful and dynamic personality which is refulgent in his monumental work that holds sway over the mind of everybody who glances through it.

His Religion: Samarasa Suddha Sanmargam:

Religion which has to aim at building up a healthy society has, in the course of time, fallen a prey to innumerable differences at the hands of graceless zealots. In order to free the universal principle of love

* A paper submitted to II World Tamil Conference.

which lies concealed and bound by the shackles of caste, colour, status in society, wealth, faith nationality and the like, the Saint reformed the old one and proclaimed it "Samarasa Suddha Sanmargam". It means all-embracing pure path. It is the true religion that removes all barriers at one stroke and establishes that compassionate and active service done to all life[18] is, the service to God. The epithet Samarasam is his watchword carrying with it deep meaning and very large implications. Having in mind the inexplicable sufferings caused by religious and feudal wars, religious bigotry and the atrocities of the wars in 1857 in Deccan and North India, the Saint infuses into us the priciple of Tolerance saying that every religion has drawn for its foundation the light of God's Grace in quite an equal measure and every religion should be accepted as such.[19] He exhorts us to shun all the differences based on Vedas, Agamas, Sastras and the like and he emphatically denounces the sectarianism embodied in them.[20] He directs us to abhor all of them as useless material which confuse us instead of bestowing clarity of vision.[21]

Unity of God-head:

The villagers of Tamil Nad do worship a number of minor-gods, even after a century after St. Ramalingar, without realising that there can be only one God-head. If this is the present state of affairs, the type of people during his times can be easily imagined. He forcibly preached that people should not waste their time and energy blindly following the dogmas and fighting for forms of faith and rituals connected with them.[22] Those who have attained clarity of vision will easily realise that there is only one God for the Universe. To say that there are several gods and to

quote dogmas from books in support of them are as futile as the wrangling between the blindmen about the elephant.[23] The Saint with the aid of a suitable simile explains that there is only one soul in the body and not, two three or five and emphatically declares that there is only one God.[24] The form of that God is Grace and Grace only. Everyone should have this realisation as True Knowledge, while all others are misleading[25]; for, "a knowledge of God is as necessary for true living as is the act of breathing for the body".[26]

His concept of Jivakarunyam or Reverence for Life:

The Saint has declared in unequivocal terms that the key to attain the Grace of God is Jivakarunyam. He has given his views in a lucid prose treatise, explaining in logical sequence all the essential features of his concept.[27] Jivakarunyam does not mean merely abstention from causing injury to other lives, but also doing all possible active service to uplift the conditions of low and to alleviate the pain of the diseased.[28] Hence he advocated strongly the abolition of the innumerable disparities in social status on account of birth and wealth. He was the first and the most powerful man who started the crusade against the evils of casteism.[29] Unlike his North Indian contemporaries, he envisaged a World Society based on Universal Brotherhood and Universal Love, devoid of distinction, inequality and other such differences which in one way or other had the dogmatic support of the Vedas or Agamas, the authenticity of which, the Saint did not accept.[30] He exhorted such an World Society to strive by all means to live in peace and harmony and to attain eternal bliss He fervently prayed to God for the expeditious regeneration of men

and women who have become dead to human values, spiritual awakening and blissful experience to which all are entitled[31] He also preached against all forms of animal sacrifice in the altars of village-gods, the worship of which he had directed to abandon.[32] Being an incarnation of compassion, he has thus proclaimed his fundamantal gospel of equality of souls and reverence for life.[33]

Samarasa Sanmarga Sangam:

The Saint thought that the above gospels on Religion, God and Jivakarunyam should not only benefit his followers during his time, who were only a few, but also the future generations. Hence the immediate necessity of forming a corporate body or organisation to work with unceasing vigour for the spread of his gospels in the future, was felt Further he wanted to infuse in his followers a sense of unity and to make them feel that he was one among them. He never wanted to assume the position of a teacher or of a prophet. So, he established in the year 1865, the **Samarasa Sanmarga Sangam**, an association of those who follow the path of Sanmargam, which marks the fulfilment of his long cherished desire.[34]

Sathia Dharma Salai:

As the Saint valued practice more than any amount of preaching, he wanted to be an active aspirant and to translate his views on Jivakarunyam into action. Under the auspices of the Sanmarga Sangam, the Sathia Dharma Salai was constructed and the Saint himself performed its opening ceremony with due solemnity on 23rd May 1867. It is a place of charity where the poor are given free food and shelter. It is extending its hospitality even to this

day according to his solemn behest.[85] He has chosen the way of feeding the poor as the first step towards the practice of jivakarunyam, as hunger is the hot-bed of all miseries and diseases of men and women in the world, and its devastating effects are many.[86] No-one but St. Ramalingar, the embodiment of compassion, might have pitched upon eradicating the evil of hunger to pave the way for the progress and enlightenment of mankind. He has also started a Samarasa Veda Padasalai (Conspolitan School of Scriptures) where his all-embracing views of religion were taught. His views on education- - how the young should be treated and taught in the class rooms, what should be taught to them and how should teachers conduct them- - - selves- - - are all noteworthy and fit for emulation.[87] He has also advocated equality of women and emphasized the importance of their education in all fields without discrimination including yogic knowledge.[88]

(To be continued)

மேற்கோள் விவரக் குறிப்பு

16. The Hon'ble Chief Justice M. Ananthanarayanan, I.C.S in his Appreciation at P. 35 of திருமுகப்பகுதி.
17. — 6ம் திருமுறை: முன்பகுதி: பக்கம் 137 பதிகம் 13–98.
18. — 6ம் திருமுறை: இடைப்பகுதி பக்கம் 128 பதிகம் 35–1.
19. — 6ம் திருமுறை: முன்பகுதி பக்கம் 171. பதிகம் 20–9.
20. — 6ம் திருமுறை: முடிந்தபகுதி: பக்கம் 132. பதிகம் 29–28,29.
21. — 6ம் திருமுறை: இடைப்பகுதி: பக்கம் 155– பதிகம் 36–84,87.
22. — 6ம் திருமுறை: முடிந்தபகுதி: பக்கம் 145 பதிகம் 33–5
23. — 6ம் திருமுறை: முடிந்தபகுதி: பக்கம் 213 பதிகம் 42–87.
24. — 6ம் திருமுறை: முன்பகுதி: பக்கம் 198 பாட்டு 45.
25. — 6ம் திருமுறை: முன்பகுதி: பக்கம் 136 பதிகம் 13–94.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

அருளே உருவான பொருள்

திரு. ஸ்ரீரமயகதாரத்னம். V. தியாகராஜன் அவர்கள்,
புதுக்கோட்டை-1 (Trichy. Dt.)

இறைவனில்லாத இடமே கிடையாது. மலரில் வாசனையாகவும் எள்ளில் எண்ணெயாகவும் இருக்கின்றான் என்பர். உலகமானது மண், தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவைகளால் ஆனது. **மண்ணில்** ஓசை, ஒளி, ஊறு, சுவை, நாற்றம் இவைகளுள்ளன. **தண்ணீரில்** சளசள என ஒழுகுவதால் ஒலியும், தட்பபரிசமும், வெண்மை நிறமும் தித்திப்பானசுவையும் உண்டு. **நெருப்பில்** ஓசையும் வெப்பமான பரிசமும் ஒளிநிறமும் உண்டு. **காற்றில்** ஓசையும், பரி

(முன்பக்கத் தொடர்ச்சி)

26, Oxford Lecture by Manchester Reader quoted by A. C. Boquet in "Comparative Religion"

27. *திருவருட்பா — வசனப்பகுதி: பக்கங்கள் 106–169.*

28. *— 6ம் திருமுறை முன்பகுதி: பக்கம் 109 பதிகம் 12–22.*

29. *— 6ம் திருமுறை இடைப்பகுதி: பக்கம் 155 பதிகம் 36–85.*

30. *வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு: ம. பொ. சிவஞானம். பக்கம் 32.*
— 6ம் திருமுறை முடிந்தபகுதி: பக்கம் 63 பதிகம் 5–9,10.

31. *— 6ம் திருமுறை இடைப்பகுதி: பக்கம் 129 பதிகம் 35–4.*

32. *— 6ம் திருமுறை முன்பகுதி: பக்கம் 128 பதிகம் 13–92,93*

33. *— 6ம் திருமுறை முடிந்தபகுதி: தனித்திருமாலை பக்கம் 222,-3 (ii)*

34. *— 6ம் திருமுறை முன்பகுதி: பக்கம் 108 பதிகம் 12–18,21*

35. *— 6ம் திருமுறை இடைப்பகுதி: பக்கம் 151,152: பதிகம் 36–71,73.*

36. *ஔவையார்: நல்வழி பாடல் 26.*

37. *— திருமுகப்பகுதி: அன்புநெறி பக்கம் 25. பாடல் 3.*
— 6ம் திருமுறை முன்பகுதி: பக்கம் 122 பதிகம் 13–36.

38. *— திருவருட்பா: உபதேசப்பகுதி — திருவார்த்தைக் குறிப்பு — 13 பக்கம் 107.*

சமும் உண்டு. ஆகாயத்தில் ஓசைமாத்திரம் உண்டு.

மின்னுருவை விண்ணகத்தில் ஒன்றாய்: மிக்கு
வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவில் மூன்றாய்த் தாழ்புனலில் நான்காய்த்
தரணித லத்து அஞ்சாகி:

என்று அப்பர் கூறுவார். இவைஎல்லாமே இறைவன்; இவற்றுக்கு மீறி எல்லாரிடமும் நிறைந்து "உள்ளும் புறமும் ஒளித்து நின்ற கள்வனாகி" எல்லாரையும் நாய் என்னுடைய என்று கூத்தாட்டுபவனும் இறைவனே என்கிறார் மணிவாசகர்.

வானாகி: மண்ணாகி: வளியாகி: ஒளியாகி
ஊனாகி: உயிராகி; உண்மையுமாய்: இன்மையுமாய்:
கோனாகி யான்எனது என்றுஅவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துகேனே.

திருவா — திருச்சத — 15

இதே கருத்தில் அருணகிரிநாதர் முருகனுடைய ஸ்வரூபத்தைப் பற்றி அப்பெருமானையே கேட்கிறார் ? ஆகாயம் உருவமில்லாதது. அருவமானது. மற்றபூதங்கள் தோன்றக் கூடியதாகவும் விசாலமானதாகவும் விளங்குவது. இறைவனும் எல்லாவற்றையும் தோற்றுவிக்கக் கூடியவனாகயிருப்பதால் "வானோ?" எனக்கேட்கிறார். வானுக்குள்ளேயே மேகம் அடக்கம். மேகந்தரும் நீர்தானோ ? **புனல்** ? எனக் கேட்கிறார். எல்லாவற்றையும் தாங்குவது பூமி. முருகனும் எல்லாவற்றையும் தாங்கி உருவத்துடன் விளங்குகிறான். எனவே முருகனே பூமியோ என்று (**பார்?**) கேட்கிறார். உயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையானதாகவும், தனது ஒளியால் உலகுள்ளபொருள்களைக் காட்டுவிப்பது நெருப்பு என்னும் ஒளி. கண்ணுடன் பிறந்த போதிலும், ஒளியிருந்தால் கண் எதிரில் உள்ளவற்றை உணர்ந்துகொள்ளும். ஆதலின் முருகனே **கனல்?** என்று அழைக்கின்றார். முருகனும் அறிவு வளர்ச்சிக்கு வழிகாட்டுபவராகவும் நன்மைதீமைகளை விளக்கும் ஒளிப்பிழம்புதானே! உடலோடுகூடி உயிர் இயங்குவதற்குக் காரணமானதாகவும், உடல் முதலானவற்றின் அசைவுகளுக்குக் காரணமாயிருப்பதுவும் காற்று, இறைவனும் காற்றுருவில் எல்லோருக்குள்ளும் புகுந்துபுறப்பட்டுவியாபித்திருக்கின்றான். எனவே நீதான் காற்றோ ? (**மாருதமோ?**)

எனக்கேட்கின்றார். இதையே மாணிக்கவாசகர்,

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி!
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி!

எனக்கூறினார். "முருகா! ஐம்பெரும் பூதங்களில் நீயார்?" எனக்கேட்கிறார். இந்தபூதங்களில் உள்ள சப்த, பரிச, ரூப, ரச, கந்தமெனும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் இவற்றையறியும் அறிவு உண்டல்லவா ? எல்லாமிருந்தாலும் அது இன்னதென்று அறியும் சக்திஒன்று உண்டல்லவா ? அந்த அறிவுதான் உண்மைப்பொருளான முருகனோ? என எண்ணி **ஞானோதயமோ** ? என்கிறார். மனிதன் அறிவையடைவதற்கு உதவுவது வேதம். என்று உண்டானது வேதம், யாரால் இயற்றப்பட்டது என அறியமுடியாததால் வேதத்தை அனாதி காலத்தது என்பர். வழிவழியாக குருசிஷ்யர்கள் மூலமாக நவின்று நவின்று பரந்த பெருமையுடையது. அவ்வேதங்கள் நான்கு. அவைகள்தான் முருகனோ என எண்ணி **நவில் நான்மறையோ** ? வேதமிருந்தும் அதையறியமுயற்சி செய்த நானே ஒருவேளை முருகனோ என எண்ணி **யானோ** ? என்றார். நானா ஆராய்ச்சி செய்கிறேன். என் மனமல்லவா இயங்குகின்றது. அதனால் என் மனமே முருகனோ என்று எண்ணி மனமோ ? என்றார். மனத்தைத்தந்து, அந்தமனம் தங்குவதற்கான யான்என்ற கூட்டினைத்தந்து, மனம் அறிந்து கொள்ளுவதற்கான சாதனமான நான்கு வேதங்களை அருளி அவற்றின் ஞானோதயமளித்த பெரியபெருமான் நீதானே! இந்த இடம்தானே எனக்குப் புகலளித்தது. ஷண்முகப் பெருமானே! கூறுக" என்கிறார்.

வானோ? புனல், பார், கனல், மாருதமோ?
ஞானோதயமோ? நவில் நான்மறையோ?
யானோ? மனமோ? எனையாண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே. *(க. அநுபூதி–4)*

இவ்வாறு உண்மைப்பொருளான் முருகனை அறிய முருகனை வேண்டுவோமாக.

—; வேலுமயிலும் துணை :—

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருப்பாண்டி விருத்தம்

இனி, திருப்பாண்டி விருத்தம்.

அகத்தியச் சூத்திரம்.

சிவானந்த விளைவு.

பொழிப்புரை:— முற்பதிகத்தில் அருளிய அருட்டிரு வேடந் தாங்கிய அடியார்க்காடல் செய்யும் சிவானந்த வடிவெனக் கண்டு இன்புற்று தற்பணியற, அதுவே பொருளென நிற்பதான நிட்டையநுபூதி.

இப்பதிகம், **கட்டளைக் கலித்துறையாகத் திருப்பெருந் துறையில்** ஓதியது.

524. இனி, பரமசிவனது உருவன்றி மற்றோருருவும் என்னறிவறியாதென்ற (தி. - ன.) :—

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதாம்
ஓருவரை யொன்றுமி லாதவ ரைக்கழற் போதிறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை யன்றி யுருவறி யாதென்றன் உள்ளமதே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ! இமயபருவதராச தவபுத்திரியான அம்மை வாமபாகரை, பாண்டியவிராசர் அன்புக்குயிரான தெவிட்டாத வமிர்தச் சுவையை, ஏக பரப்பிரம சொருபரை, பற்றற்றவரை, அவரது திருவடிக்கன்புப் பணி செய்வதாக, உலகறிய அடியேன் நெஞ்சுருக்குவதாகவே பரிமேலழகியார் எழுந்தருளிய சேவகனாரான சோமசுந்தரக் கடவுள் ஒருவரையுமே அடியேன் கண்ணும் கருத்தும் அறிவதொழிய, வேறுருவுடையவர்களை அடியேன் கருத்தறிவதில்லை; என அருளியதைக் காண்க.

---

* *இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனும[illegible]ற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூ[illegible]யத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.*

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

(மலர் 19. இதழ் 5-ன் தொடர்ச்சி)

IV

MANIKKA VASAHAR

(Sanskrit form MANIKYA VACHAKA)

92 யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென்
 னன்பும்பொய்
ஆனால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே.

92 Since I am false, and false my heart, and false my
 very love,
Howe'er I weep, still held by deeds, can I reach
 Thee above?
O honey, nectar, O essential sweetness, great as
 sweet,
Grant grace to me to find the path that leads unto
 Thy feet.

(To be continued.)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N. B. Copies available for sale at the above Press.)

உ

சிவ சிவ

பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு

மூவர்தேவாரம் :: தலமுறை

[அடங்கன் முறை]

(ஒன்று முதல் ஏழு திருமுறைகள்)

மார்கழித் திருவாதிரை வெளியீடு; 14—1—1968உ

பெரிய எழுத்தில்-வெள்ளைத் தாளில்—1600 பக்கங்கள்

டெமி சைசு—காலிக்கோ கட்டடம் – விலை ரூ. 8—75

தனிப்பிரதி அனுப்பப் பதிவு அஞ்சல்
தபால் கட்டணம் ரூ. 2—15

மூன்று பிரதிகளுக்குக் குறையாமல் வாங்கும் வெளியூர் அன்பர்களுக்குத் தனிச் சலுகை பின்வருமாறு:-

தமிழக அரசு எல்லைக்குளிருக்கும் எந்த ரயில்வே நிலயத்துக்கும் ரயில்வே கட்டணம் இல்லாமல் அனுப்பப்பெறும். அன்னோர் வாங்கும் புத்தகங்களுக்கு உரிய முழுவிலைத்தொகை M. O. அனுப்புவதோடு, ரயில்வே நிலையத்தின் பெயரும், தங்கள் முகவரியும் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். V. P. P. யில் அனுப்பப்பெற மாட்டாது.

வியாபாரிகள் 20 புத்தகங்கள் வாங்கினால் 20% கழிவு உண்டு. பாக்கிங்—தபால் கட்டணம் தனி.

கிடைக்குமிடங்கள்:

1. திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
   நிரந்தரத் தலைவர், 'குமரகுருபரன் சங்கம்'
   ஸ்ரீவைகுண்டம், *திருநெல்வேலி ஜில்லா.*

2. தியாகராச விலாஸம்,
   53, *பிள்ளையார் கோயில்தெரு,*
   திருவேட்டீஸ்வரன் பேட்டை, சென்னை-5.

மணிவாசகரின் மாண்புறு உவமைகள்

வித்துவான். திரு. பி. ரா. நடராசன் அவர்கள்.

(முன் இதழ் 5–ன் தொடர்ச்சி)

உவமை 6

'பூவில் நாற்றம் போன்று' (115)

உ. பொ. நி.

பூவில் நாற்றம் போன்றுயர்ந்து எங்கும்
ஒழிவுஅற நிறைந்து மேவிய பெருமை.

பொழிப்பு

மலரின் கண்ணுள்ளதாகும் நறுமணத்தைப்போல எல்லாவற்றினும் நீக்கமற நிறைந்து பொருந்தி விளங்கும் பெருமையுடையோன்.

விளக்கம்

இவ்வுலகத்தே இறைவன் இல்லாத இடமுமுளதோ! இறைவன் இல்லை என்று கூறும் சொல்லிலும் அவன் உள்ளதாகவன்றே கல்வியிற்பெரியவர் பேசுவர். யாண்டும் ஒளிப்பிழம்பாய் விளங்கும் இறைவன் மணத்துடனும் வீற்றிருக்கின்றான் என்பதனையே 'பூவில் நாற்றம் போன்றுயர்ந்து' என்பதால் விளக்குகின்றார். 'உற்ற வாக்கையினுறு பொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல், பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்' (அதிசயப்பத்து. 9.) என்று பின்னரும் பேசுவர். எல்லா மலர்களும் மணம் பெற்றிருப்பினும் ஈண்டு நுவலப்படுவது நறுமணத்தால் உயர்ந்து விளங்கும் மலரையே. மலர் தோன்றும் பொருளது; அதனுளிருக்கும் மணமோ நுகரவல்லார்க்குத் தோன்றும் நிலையது. எனவே மணமின்றி மலரில்லை. மணமில்லாமல் மலரிருத்தல் போன்று இறைவனில்லாப் பொருள்களும் இல்லை. மணம் நன்மை தருவது போல மணமனைய அவனும் நன்மை தருபவனே. 'தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றநீ' என்று பரிபாடலும் பேசும்.

உவமை 7

'மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்' (124)

உவமை 8

'மின்ஞெளி கொண்ட பொன்ஞெளி திகழ' (125)

உ. பொ. நி.

மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்ஒளி கொண்ட பொன்ஒளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க்கு ஒளித்தும்.

பொழிப்பு

பெரிய பச்சைமணிக் குவியலில் ஒளிவிடும் மின்னலின் ஒளியையொத்த பொன்னின் ஒளிபோல் இறைவன் விளங்க அவ்வனைத்திசை முகனை நான்முகனும் திருமாலும் தேடிய காலத்து அவர்க்கு மறைத்தனராக.

விளக்கம்

இறைவனின் திருவுருவினைச் சுட்டிக்காட்டுவாராய் மாசு மறுவற்ற மணிக்குவியல்களிடையே மின்ஞெளியை யொத்த பொன்ஞெளி என்றார். இறைவன் அழற்பிழம்பாய் நின்ற போது நான்முகனும் திருமாலும் திருமுடியையும் திருவடியினையுங் காணச்சென்றனர். 'பிரமன்மால் காணுப்பெரியோன் காண்க' (திருவண்டப்பகுதி. 38.) 'பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கு அப்பால்' (குயிற்பத்து. 1.) 'திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை' (திருத்தெள்ளேணம். 1.) எனப்பெருமானுர் பேசுவது காண்க. திருவடியையும் திருமுடியையும் காணச்சென்ற இருவரும் ஒளியுட் குறைந்தாரல்லர். பச்சைமால் மலைபோன்ற மேனியராகத் திருமால் இருத்தலின் பச்சைநிற மாணிக்கக் குவியலையும், விண்ணிற்குச் சென்ற நான்முகன் மின்ஞெளியனையான் எனவும் இவ்வொளி கொண்டிலங்கும் இருவரிடையே சிவனுர் பொன்ஞெளியாய் நிற்கும் நிலையினை அடிகள் அழகுற ஓதுவது மிக்க இன்பம் பயப்பதொன்றாகும். நான்முகனும் திருமாலும் திருமுடியையும் திருவடியையும் காணச்சென்றனரேயன்றி ஒருவரும் எதனையும் கண்டிலர். திருமால் தாம் காணமுடியாமையை ஒப்புக்கொண்டார். நான்முகனே இறைவனுர் திருமுடியைக் கண்டதாகக் கழறி அதற்குக் கரியாகச் சிவனுர் திருமுடியிலிருந்து திருவடிக்குச் சென்றுகொண்டி

ருந்த தாழம்பூவினைக் கொண்டுவந்தார். பொய் கூறியதற்காக நான்முகனுக்குத்தனியே திருக்கோயில் அமையாமற் போகவும், பொய்க்குக்கரியாக இருந்த தாழம்பூவினைத் தம் மலர் வழிபாட்டிற்குப் பயன்படாது போகுமாறும் சபித்தனர் என்பர். இவ்விருவருக்கும் திருமுடியையும் திருவடியையும் மறைத்தநிலையை விரித்துக்கூறுவன். இவ்விருவருக்கும் இறைவன் திருமுடியையும், திருவடியையும் மறைத்ததை 'அரியொடு பிரமற்களவறி யொண்ணான்' என்று கீர்த்தித்திருவகவலிலும் கூறுவர். அரிஎன்பார் செல்வத்திற்கதிபதியான திருமகளின் கேள்வர்; அயன், கல்விக்கதிபதியான நாமகளின் கேள்வர். இவ்விருவரும் தாம்தாம் செல்வச்செருக்குடனும், கல்விச்செருக்குடனும் முனைப்படங்காது மீதூரப்பெற்று இவ்விரண்டாலுமே இறைவனைக் காணலாமெனச் சென்றனர். முனைப்பிற்கு இறைவன் வரவேற்பளிப்பனோ! அன்பெனும் பிடியுள் அகப்படும் அவன் இச்செருக்கிற்குச் சிக்குவனோ! கல்வியினாலும் செல்வத்தினாலும் நாம் இறைவனைக் காண முடியாது. அதற்குமேற்போந்த இவ்விருவரே சான்றாவர். எனவே அன்பால் ஆண்டவனைப் பற்றுவோம் என்பாராய்ப் பெருமானார்

'கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வமென்னும் அல்லலிற் பிழைத்தும்

(போற்றித்திருவகவல் 38, 39)

எனக்கூறியதையுங்காண்க. வானோர்க்கு அரியாய் உள்ள அவன்அடியாரிடம் (அன்புகொண்டாரிடம்) எளியாயுள்ளான்

அடியார் உள்ளத்து அன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்

(கீர்த்தித்திருவகவல் 7—8)

எனவே இறைவனை முனைப்பால் காணமுடியாது. அன்பு என்ற ஒன்றினால் தான் காணமுடியும் என்று இதன்மூலம் அடிகளார் கூறுகின்றார் என்க.

உவமை 9

'தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்' *(162)*

உ. பொ. நி.

'தடக்கையின் நெல்லிக் கனிஎனக்கு ஆயினன்'.

பொழிப்புரை

பெரிய உள்ளங்கையில் நெல்லிக்கனியைப்போல் என்னிடத்து ஆனான்.

விளக்கம்

அங்கை நெல்லிக்கனிபோல வெளிப்படையாய்த் தோன்றினன் என்க. நெல்லிக்கனி உருவத்தால் சிறியது. அச்சிறிய கனியை நோக்க நம் உள்ளங்கை பெரியது. பெரிய உள்ளங்கையில் சிறிய பொருளான நெல்லிக்கனியை வைத்துப்பார்த்தால் மேலும், கீழும், முன்பக்கமும், பின்பக்கமும் நமக்கு நன்ருகத் தெரியவரும். ஆங்கிலத்தில் இதனை 'Transperent' என்று கூறுவர். இதன் காரணமாகவே 'அங்கை நெல்லிக்கனிபோல' என்ற தொடரும் எழுந்தது.

4. போற்றித்திருவகவல்

உவமை 10

'தழலது கண்ட மெழுகது போல' (60)

உவமை 11

'கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்
படியே' (63 – 64)

உவமை 12

'பசுமரத் தாணி அறைந்தாற் போல' (65)

உவமை 13

'கற்று மனம் என' (73)

(தொடரும்)

திருவேரகமும் திருமுருகனும்

வித்துவான். கொ. சி. சுவாமிநாத முதலியார் அவர்கள்,
தமிழாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி,
குத்தாலம், தஞ்சை மாவட்டம்.

ஊரிலான்குணங் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான்ஒரு முன்னிலான் பின்னிலான் பிரிதோர்
சாரிலான்வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான்குகக் கடவுளாய் என்னுளே நின்றான்.

திருமுருகன் அருளுருக் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருப்பதிகள் பலஉள்ளன. அவற்றுள் திருவேரகம் என்பதும் ஒன்றாகும். இத்திருவேரகம் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய திருமுருகாற்றுப் படையுள் அமைந்த அறுபடை வீட்டுள் நான்காவது ஆகும். அறுபடை வீடுகள், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை, என்பனவாம்.

"பத்துப்பாட்டு" என்னும் சங்க இலக்கியத்தின் முதற் பாடலாக விளங்குவது இத்திரு முருகாற்றுப்படை. இதில் 177 வரிமுதல் 189 வரிவரை அடங்கியது திருவேரகப்பாடல். இத்திருவேரகப் பாடல் கூறும் வரலாறு பின்வருமாறும்:—

நற்குடியில் பிறந்த அன்னை தந்தையரின் பரம்பரையில் வந்த பல்வேறு பழங்குடியினர், கற்றல், திருமணஞ் செய்து கொள்ளுதல், பிறருக்குக் கொடுத்தல், இவற்றின் மறுதலையாகிய கற்பித்தல், திருமணஞ்செய்துவைத்தல், பிறர் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளுதல் என்னும் ஆறு தொழில்களையும் உடையவர்கள். முறை பிறழாத கொள்கையினர். நாற்பத்தெட்டு ஆண்டுகள் வரையில் மறைநூல் சொல்லும் முறைப்படி நல்லிளமை போக்கியவர்கள். ஒன்பதுநூலைப் பொருந்திய மூன்று புரியாகிய நுண்ணிய பூணும் நூலைத் தரித்தவர்கள். எப்பொழுதும் அறநெறியினைக் கூறும் கொள்கையினர்,

நாற்சதுரம், முச்சதுரம்,வில்வடிவு ஆகிய மூன்று வேள்விக்குண்டங்களில் ஒவ்வொரு நாளும் தீயை வளர்ப்பவர்கள். இதனால் முத்தீச் செல்வர் என்று அழைக்கப்படுபவர்கள். துணை அறிவைப் பெறும் பூணூல் சடங்கிற்கு முன்பொரு பிறப்பும் பின்பொரு பிறப்பும் உடையவர்கள், இதனால் இரு பிறப்பாளர் என்று அழைக்கப்படும் ஒழுக்கத்திற் சிறந்த அந்தணர்கள். இவர்கள் நீராடி உடுத்த ஈரம் புலராத ஆடை உடம்பிலே கிடந்துபுலர, மிக்க மணம் பொருந்திய மலர்கள் ஏந்திய கைகளை உச்சியில் கூப்பிநின்று குகேசனாகிய எம்பெருமானைத் துதித்து ஓம், "நாமோ குமாராய" "சரவணபவ" என்று சொல்லப்பட்ட ஆறெழுத்தைத் தன்னுள் அடக்கி இருக்கின்ற கேட்டற்கரிய மறையாகிய முருக மந்திரத்தை ஓசை குன்றாது நாதக் கட்டுடன், நாப்புடைப் பெயரும் அளவில் பயிலப்பாடி ஓதித் தாங்கள் வழிபடு காலம் அறிந்து போற்றிப் புகழ, அதற்குப் பெரிதும் மகிழ்ந்து "திருவேரகம்" என்ற தலத்தில் குரு மூர்த்தியாய் எழுந்தருளும் உரிமை பெற்ற திருமுருகன் என்கின்றார்.

எனவே போற்றிப் புகழும் வைதிக வழிபாட்டிற்குப் பெரிதும் உவந்து ஏரகத்தில் எழுந்தருளும் உரிமையுடையவன் என்றார். ஆற்றுப்படை கூறும் முருகப்பெருமான் எழுந்தருளிய எல்லா இடங்களிலும், முருகவள்ளல் யார் என்பதை ஏனைய புலவர்கள் போலவே பரிசுபெறத் தகுதியுள்ளார்க்கு அறிவுறுத்தும் பகுதியை மூன்று பிரிவாக வகுத்து திருப்பரங்குன்றப் பகுதியில் நாயகன் தேவன் எனவும், திருச்சீரலைவாய்ப் பகுதியில், அறுமுகப் பெருமான் எனவும், திருவாவினன் குடிப்பகுதியில், தேவாதி தேவத்தன்மையைக் காட்டும் துரியக் கடவுள், எனவும் தெரிவித்திருப்பது சிந்திக்கத் தக்கதாகும்.

சிலப்பதிகாரம்:— குன்றக் குரவை தெய்வம் பராஅயதில்

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே"

என்ற இடத்து வெண்குன்று என்பதற்குச் சுவாமிமலை என்றார் அரும்பத உரைஆசிரியர். திருவேரகத்தைப் பற்றி ஒன்றுங்

கூறுது விடுத்தார். அதற்குப்பின் அடியார்க்கு நல்லாரும் திருவேரகத்தைப்பற்றி விளக்கம் தந்தாரில்லை. ஏனினும் பத்துப் பாட்டுள் முருகாற்றுப்படை 189 ஆம்வரி ஏரகத்துறைதலும் உரியன் என்பதற்கு, ஏரகம் என்பது மலைநாட்டகத்து ஒரு திருப்பதி என்பார் நச்சினார்க்கினியர். இவ்வுரைப்பகுதியை எடுத்துக்காட்டுவார் திரு. உ. வே சா. ஐயர் அவர்கள். நாவலர் பண்டித-ந.மு- வேங்கடசாமி நாட்டார் அவர்களும், தனது உரையில் வெண்குன்று என்பது சுவாமிமலை என்றும், ஏரகம் மலைநாட்டகத்து ஒரு திருப்பதி என்றும் நச்சினார்க்கினியர் உரையையே உரைத்துப் போந்தனர்.

மேற்கண்டவைகளால் திருவேரகம் என்பது சுவாமிமலை என்பதற்கு, அரும்பத உரை ஆசிரியரும், அடியார்க்கு நல்லாரும், பதிப்பாசிரியர் திரு-உ- வே-சா. ஐயர் அவர்களும், திரு. நாட்டார் அவர்களும் விளக்கம் தந்தார்கள் இல்லை.

இத்திருவேரகம் மலைநாட்டகத்துள்ள தென்பதை அருணகிரித் திருப்புகழ் கூறுமாறுகாண்க.

திருமருவு புயனயனே டயிராவதக் குரிசில்
அடிபரவு பழநிமலை கதிர்காமம் உற்றுவளர்
சிவசமய அறுமுகவ திருவே ரகத்திலுறை—பெருமாளே!
அதிசமய நேயமுற்றம் பழநிமலை மீதுதித்த
அழகுதிரு வேரகத்தின் — — முருகோனே!

என்ற திருப்புகழ் பாடல்களிலிருந்து, காவிரிக்கு வடகரையில் உள்ள சுவாமிமலை என்னும் திருவேரகமும் மலைநாட்டகத்து திருவேரகமும் வேறு என்பது விளங்கும்.

ஈண்டு பழநிமலை மீதுதித்த அழகு திருவேரகத்தின் முருகோனே! என்றதினால், திருவாவினன் குடியைச் சார்ந்த "சிவகிரி" "சத்திகிரி" எனவழங்கும் பழநிமலைப் பகுதியையும் "திருவேரகம்" என்றழைக்கப்படுவதை அருணகிரி வாக்கால் அறியக் கிடக்கின்றது.

சோழநாட்டிலுள்ள சுவாமி மலைக்கு ஏரகம் என்னும் மற்றொரு பெயரும் உண்டென்பதை

ஏரகவெற்பெனும் அற்புதமிக்கசு
வாமிமலைப்பதி மெச்சிய சற்சன
இராசத இலட்சண உத்தமிபெற்றருள்—பெருமாளே!

என்னுந் திருப்புகழ் பாடலால் அறிக!

மற்றும், "சூதம் மிகவளர் சோலை மருவு சுவாமி மலை தனி லுறைவோனே!" என்றமையானும், குடகாவிரிக்கு வடபால்வாழ் என்ற குறிப்பாலும், அருணகிரிநாதர் பாடல் களில் சில இக்குடந்தைக்கு அருகிலுள்ள "சுவாமிமலை" என்னும் ஏரகத்தைக் குறிப்பது அறிஞர்களின் சிந்தனைக்கு உரியவாம்.

தஞ்சைமா நகரில் துணைத் தண்டல்நாயகமாய் இருந்த திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் திருவேரகம் என்பது "உடுப்பி சுப்பிரமணியம்" என்ற மலைநாட்டுத் திருப்பதியே என்பார். "புலராக்காழகம் புலர உடீஇ" என்ற சொற் ரொடர் கொடுக்கும் வழக்கம் அத்திருப்பதியில் இன்றுங் காணப்படுவதாயும், அவர் அதை அழுத்தமாகக் குறிப்பதும் நோக்கத்தக்கது.

எனினும் இக்கருத்து ஒவ்வாமையும் இது அருணகிரி வாக்குக்கு முற்றிலும் முரண்பாடாகும் என்றும் அன்பர்கள் இதற்கு உடன்படார்கள் என்றும் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளி ஆசிரியராய் இருந்த திரு. ந. சே. இராமச்சந்திர ஐயர் அவர்கள் தனது 'திருமுருகாற்றுப்படை ஒரு நாட்டத்'துள் எழுதி இருக்கிறார்.

இனி இவ்விருவர் கூற்றும் ஆராய்ச்சிக்கு உரியனவாகும். எனினும், அருணகிரி திருப்புகழில் கண்டபடி "உடுப்பியைத் "திருவேரகம்" என்று குறித்தாரில்லை. ஆகையால் இக் கருத்தை விட்டு, மேல் ஆராய்வோமாக. சோழநாட்டில் "குடகாவிரிக்கு வடபால்வாழ்" ஏரக வெற்பெனும் அற்புதம் மிக்க சுவாமி மலைப்பதியும், பழநிமலை மீதுதித்த அழகு "திரு வேரகமும்" தனித்தனி உள்ளன என்பதும் உண்மை.

இவ்விரு திருப்பதிகளில் நக்கீரனர் கூறிய "ஏரகம்" எது வென்று ஆராய்வாம். இப்புலவர் பெருமான் கூறியபடி போற்றிப்புகழும் வைதீக வழிபாடு இவ்விரு திருத்தலங் களிலும் இன்றும் நடைபெறுவதைக் காண்கின்றேம்.

ஆயின் முருகாற்றுப்படை ஏரகப்பாடலில் முருகன் குருவாயரற்கு உபதேசம் வைத்த வரலாறு கூறினரில்லை. இது கைலையை அடுத்த கந்த மாதனத்தில் நிகழ்ந்ததெனக் கந்தப்புராணம் கூறும். மற்றும் பழநித் தலப்புராணத்திலும் இவ்வரலாறு அறியப்படும். அக்கந்த மாதனத்தின் கொடு முடிகளாகிய "சிவகிரி" "சத்திகிரி" என வழங்கும் பழநி மலைப்பகுதியே முருகன் குருவாயரற்கு உபதேசம் வைத்த இடம் என வரலாற்ருல் அறியப்படும்.

அவ்வாறிருக்க, ஈண்டு சோழநாட்டுத் "திருவேரகத்தில்" முருகன் குருவாயரற்கு உபதேசம் வைத்த வரலாறு வழங்கப் படுவது யாதெனின், இஃது அன்பர்கள் பால குருவாகிய முருகனை வழிபடும் நிமித்தம் இப்படிப்பட்ட ஒரு மூர்த்தியை "ஈண்டு" நிலைநிறுத்தி, அதற்கு ஏற்ப "சுவாமிநாதன்" என் னும் பெயரிட்டு வழிபடலாயினர் என்று கொள்க!

அப்படியாயின் முருகாற்றுப்படையில் நக்கீரனர் அருளிய ஏரகம் எதுவெனின், முருகப்பெருமான் "ஊரூர் கொண்ட சீர்கெழு விழாவினன்" ஆகையால் இவ்விரு ஏரகங்களையுந் தனித்தனி குறிக்காது "ஏரகத் துறைதலு முரியன்" என்று பொதுப்படக் கூறிச் சென்றுர்.

ஆகையால் இப்பாடல் இவ்விரு திருத்தலங்களையுங் குறித்துக் கூறியதெனக் கொள்ளலே சாலச் சிறந்ததாகும்.

(தொடரும்)

Ayyappan or the Great Preceptor

Thiru. M. V. SRIDATTA SARMA Avl.

In the Kerala-Pandya region, worship is conducted of Ayyappan, who is styled **Mahasasta** or the great teacher. Shrines have been set up in all places, the chief centre being Sabarimalai in the midst of a jungle-the habitat of wild animals and situated near Shencottah. There is also a special shrine at Mulukunnathakavu (five miles from Trichur) in the midst of thick bamboo groves. An idol of Ayyappan has also been set up in the temple at Guruvayur. The cult of Ayyappan which had its origins in the Kerala country, gradually spread over the neighbouring states of Mysore and Madras. Worship of Ayyappan is conducted even in Banares, where a shrine exists.

According to the myths centred round Ayyappan, it is said that on the Uttaraphalguni day in the month of Vrischika, when the Sun rests in the zodiacal sign Scorpio, this form of divinity descended down in human form. A festival is observed on this date (every year) when a large number of pilgrims gather. It is stated that the cult of Ayyappan had its origin at Nurani Agrahar, a settlement near Palghat.

According to a **churnika** given in the **Karanagama**, Ayyappan or Mahasasta is the seed-bed of phenomenal

---

The above article is reproduced with the kind permission of the Editor of 'Bhavan's Journal'.

existence (Samsaratarubijahetu). He is the causal force. The story goes that at the time of churning the ocean for the recovery of the elixir of life, there arose an altercation between the celestials and the fiends. With a view to appease the contesting parties and bring about a settlement there came out a personage with his attractive and charming form and winning manners. He was the outcome of the fusion of Vishnu in the form of a damsel (Mohini) causing bewilderment with Siva, who was Mohana. Vishnu became the enchantress while Siva was the enchanter In other words, Vishnu by his Power of Maya played the role of Prakriti (Primordial Nature), while Siva was the Purusha. Sasta was thus Hariharaputra,[1] an epithet assigned to him (Surasuravivada samanonmukha damodara samasadita nikhilajana hrdayamohanamohinivesevilasa gangadharanga sambhutah). This Sasta played the role of an arbiter.

Mahasasta is described in Karanagama as a person of great attainments, a cannoisseur of fine arts, proficient in the sacred texts and scriptures He is the granter of the desires cherished by the Sadhakas. He is blameless, and a source of terror or menace to those who cause impediments to the meek and the pious in their rightful pursuits (bhajakajana vancha paripuraka) In a way, he resembles Cupid. His body is described as being similar in hue to the Chinarose or tawny colour of the morning.

A dhyana slokagiven in the Karanagama describes him as being seated in the midst of a luminous orb. He is three-eyed and decorated with celestial garments. He sets his shafts in the form of flowers to the bow. He holds a golden vessel set with jewels (perhaps containing ambrosia) and presents the mudra of assurance (abhaya). He is seated on an inebriated tusker, assuming

a bewildering form.[2] In another account it is described that when he directs his shafts (of Mandara and Utpala flowers), swarms of bees move about.

A sloka given in the Prapanchasara describes him as having a body of swarthy complexion (soft, tender and broad) and wearing a lovely apparel. He holds a red lotus blossom and is decorated with a lofty jewelled crown. His locks are curved He is the granter of the desires of his devotees [3]

[1] Muttuswamy Dixitar, the great musical composer of South India who was a great devotee of Devi. addresses Gauri in one of his compositions in Kambhoji ragam as Harihara putra janani,—Marakatavalli.

[2] Tejomandalamadhyagam trinayanam divyambaralamkrtam
Devam puspakasaresu karmakalasan manikyapatrabhayam.
Bibhranam karapankajairmadagaja skandhadhirudham maha
Sastaram satatam namami varadam trailokya sammohanam.
—Karanagama.

[3] Asyamakomalavisalatanum vichitra
Vasovasanamarunotpalapuspahastam.
Uttungaratnamakutam kutilagrakesam
Sastaramisavaradam saranam prapadye. —Prapanchasara.

" ஞானசம்பந்தம் "
அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது, சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,
உள்நாடு ரூ. 3-00 * வெளிநாடு ரூ. 4-00

செயலாளர், " ஞானசம்பந்தம் " அச்சகம்,
தருமபுரம். மாயூரம் P. O.

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

திருக்குறள் பதிப்புநிதி வெளியீடு – புதிய பதிப்பு.

அறத்துப்பால்
பொருட்பால்
காமத்துப்பால்
} முப்பாலும்

பரிமேலழகருரையுடனும், திருவள்ளுவரைப்பற்றிய முக்கிய குறிப்புகள் - ஆராய்ச்சிக் கட்டுரையுடனும்

பெரிய எழுத்தில், உயர்ந்தரக வெள்ளைத்தாளில்
32+572+2=606 பக்கங்கள் கொண்டது.
[பிரதி ஒன்றுக்கு விலை ரூ. 2-25]
பதிவுத் தபால் கட்டணம் ரூ. 1-10.

20 பிரதிகள் ஏககாலத்தில் வாங்குவோருக்கு 20% கழிவு உண்டு
பாக்கிங் ரயில்வே கட்டணம் தனி.

யாவரும் பரிமேலழகர் உரையுடன் கூடிய திருக்குறள் எளிதில் பெறவே இம்மலிவு பதிப்பு.

கிடைக்குமிடங்கள்:

(1) திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை பி. ஏ., பி. எல்.,
நிரந்தரத்தலைவர், ஸ்ரீ குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம். (Po)

(2) தியாகராசவிலாசம்.
53; பிள்ளையார் கோயில் தெரு,
திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

புள்ளிருக்கு வேளூர்ச் செல்வக்குமரகுருபரன்

ஸ்ரீ ருத்ரபாராயண பட்டர் படிக்காசு நிதி ரூ. 2000/-

சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் உள்ள பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றுயதும், சம்பந்தரும் அப்பரும் தேவாரம் பாடிய பெருமையுடையதும், புள் / சம்பாதி சடாயு /, இருக்கு /வேதம்/, சேய்/ முருகக் கடவுள் / ஆகியோர் பூசித்தமையின் புள்ளிருக்கு வேளூர் எனப் பெயர் பெற்றதும், ஆதிவ்யித்தியநாதபுரி, கந்தபுரி, குருகூர், சடாயுபுரி, தினகரபரி, பருதிபுரி, வேதபுரி என்று இன்னோரன்னவாறு முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அவர்களால் குறிக்கப்பெற்றதும், வேம்பு தல விருக்ஷமாகவும், சித்தாமிர்தம் தீர்த்தமாகவும் அமைந்துள்ளதும், திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் சீரிய பரிபாலனத்தில் உள்ளதும், ஆன வைத்தீசுவரன்கோயில் என்னும் சிவஸ்தலத்தில் வைத்தியநாதப்பெருமான் ஆலயத்தில் எழுந்தருளி அருள்புரிபவரும், ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் வேளூர் தொழுதகலுங்கால் செவ்வேள், அருச்சகர் உருவில் சென்று வெண்ணீறளித்து 'எம் பேரில் பிள்ளைத் தமிழ்பாடுக' எனப் பணித்துப் 'பொன்பூத்த' என்று அசரீரியாக முதலெடுத்தருள அதனையே முதலாகக் கொண்டு பாடியருளிய முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்,

'மறைமுடிவில் நின்று நிறை செல்வன்'
'தனிமுத்திக்கு ஒருவித்து'
'அறிவு ளறிவை யறியுமவரு மறியவரிய பிரமம்'
'செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்'
'மூலமெனக் குலநான்மறை யோலிடு முழுமுதல்'
'தினகர புரிவரு தனிமுதல்'
'மெய்கண்ட தெய்வம் இத்தெய்வமல்லால் புவியில் வேறில்லை'
'குரவு கமழ் தருகந்தபுரியிலருள் குடிகொண்ட குமரகுருபரன்'

என்று இன்னனம் பல்லாற்ருலும் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் அவர்களால் புகழ்ந்து பாடப்பெற்றவருமான ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமிக்குக் கிருத்திகைதோறும் நடைபெறும் திருநீராட்டின்போது ஸ்ரீ ருத்ரபாராயணம் செய்வார் இருவருக்குப்

படிக்காசு அளித்தற்பொருட்டு இந்நிதி திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** நிறுவப்பெற்றது. இது **'புள்ளிருக்கு வேளூர்ச் செல்வக்குமரகுருபரன் ஸ்ரீ ருத்ரபாராயண பட்டர்** படிக்காசு நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 2000/- ரூபா இரண்டாயிரம். இது 5-3/4% வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாளில் முதலீடு செய்யப்பெற்றுள்ளது, 5-3/4% மெட்ராஸ் லோன் ஆப் 1979- ஸ்டாக் சர்டிபிகேட் நெ. ஓம்எஸ். 651- ரூ. 2000/- இது நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்று வரும்.

3. அ. நம்மால் மூலதனங்கள் நிறுவப்பெற்று ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு நாளாகிய வைகாசி அமரபக்ஷம் திருதியையில் வைத்தீசுவரன் கோவிலில் அன்னம்பாலிப்பும், பங்குனி உத்திரம் முதல் வைகாசி மாதம் முடியத் தண்ணீர்ப் பந்தல் தருமமும் நடத்தப்பெறுகின்றது. மேலும் செந்திலாண்டவன் திருவருட்டுணைகொண்டு சேமவைப்புக்கள் நிறுவப்பெற்று ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமிக்குக் கிருத்திகை தோறும் அபிஷேகப்பணிபுரியும் சிவாசாரியார் ஒருவருக்குத் திருமஞ்சனப்பரிசு அளித்தலும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்குக் கிருத்திகைதோறும் சந்தனபிஷேகமும் நடைபெற்று வருகிறது. அங்ஙனமே ஷை முதற்பொருளினின்று கிடைக்கும் வட்டித் தொகையில் நிர்வாகச் செலவுகள் போக எஞ்சிய தொகையில் வைத்தீசுவரன்கோவிலில் ஸ்ரீ முத்துக் குமாரசுவாமிக்குக் கிருத்திகைதோறும் திருநீராட்டு / அபிஷேகம் / நிகழ்த்தும்போது ஸ்ரீ ருத்ரபாராயணம் செய்யும் சிவாச்சாரியார் ஆகிய பட்டர்கள் இருவருக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 3-00 வீதம் இருவருக்கும் ஆக ரூ. 6-00 மட்டும் படிக்காசு அளிக்க ஒவ்வொரு கிருத்திகையிலும் செலவு செய்யப் பெற்றுவரும்.

ஆ. புள்ளிருக்கு வேளூரில் முப்போதும் திருமேனி தீண்டுபவரும் சிவாச்சாரியார்களும் ஆக இருக்கும் பட்டர் அல்லது குருக்கள் மட்டுமே ஷை ருத்ரபாராயணம் செய்ய

உரிமையுடையவர் ஆவர்.

இ. மேல்கண்டவர் அன்றி வேறு யாரேனும் ருத்ரபாராயணம் செய்தால் அன்னோர் ஷை படிக்காசுத் தொகை பெறுவதற்கு உரியர் அல்லர்.

4. மேலேகண்டவண்ணம் சிவாச்சாரியார் இருவர் கிருத்திகை நீராட்டின் போது ஸ்ரீ ருத்ரம் பாராயணம் செய்ததாக வைத்தீசுவரன்கோவில் தேவஸ்தான டிரஸ்டி ஸ்தானீகம் கட்டளைத் தம்பிரான் சுவாமிகள் இடமிருந்தோ அல்லது ஷை தேவஸ்தான சூப்பரின்டென்டு இடமிருந்தோ கிருத்திகை நீராட்டு முடிந்த 7 நாட்களுக்குள் அத்தாட்சி வாங்கி நமக்கு அனுப்பிக் கொண்டால் ஷை பாராயணத்துக்குரிய படிக்காசுத் தொகை பாராயணம் செய்த இருவருக்கு மட்டும் தனித்தனி மணியார்டர் வழி அனுப்பிவைக்கப்பெறும்.

5. ஷை படிக்காசுத் தொகைகள் அளித்தோ அல்லது குறித்த காலத்தில் அத்தாட்சி வராததால் படிக்காசு அளிக்காததாலோ தொகை எஞ்சியிருப்பின் அத் தொகை திருச்செந்தூரில் நம்மால் நிறுவப்பெற்ற ஸ்ரீ ருத்ராத்யயன பட்டர் படிக்காசு நிதியின்படி வழங்கிவரும் தொகையோடு சேர்த்து வழங்கப் பயன்படுத்தப்பெறும்.

6. வட்டி வருமானத்துக்கு ஏற்ப ஷை படிக்காசுத் தொகை குறைக்கவும் கூட்டவும் பெறும்.

7. இத்தருமம் வேறு எம்முறையிலும் மாற்றியமைக்கப் பெறமாட்டாது. இம்முதற்பொருள் நம்பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இம்முதற்பொருள் திரும்பியளிக்கப்பெற்றதும் அதிக வட்டி வரக்கூடிய அரசியல் கடன்தாள்களிளோ அல்லது நிலையான முதலீடுகளிலோ முதலீடு செய்யப்பெறும்.

'இழுமெனருவி சொரியுமிமய முதல்விபுதல்வன் வருகவே ....
வளமைதழுவு பருதிபுரியின் மருவுகுமரன் வருகவே' ....

ஸ்ரீ குமரகுருபரர்.

Tirupanandal
Dated 7-3-1968 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub-Registrar's Office on 9-3-1968 as No 18 of 1968 of Book 4 volume 54, pages 243 to 246.